திருமதி த. ந. அனந்தநாயகி : ஆம் என்று பதில் சொல்லி விட்டார்கள். எப்போது அனுமதி கோரப்பட்டது? எப்போது வேலை முடிக்கப்படும் என்று அமைச்சரவர்கள் தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இந்த வேலை துவங்கப்பட்டு, நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவில் முடிவடையலாம்.

திருக்கண்மாலீஸ்வரர் கோயில் நிதி.

*247 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம், திருக்கண்மாலீஸ்வரர் கோயில் நிதியிலிருந்து கிருஷ்ணராயபுரத்தில் பயணியர் விடுதி ஒன்று கட்டப்படுவதற்கான திட்டம் ஏதேனும் ஆய்வு செய்யப்பட்டதா?

(இ) ஆம் எனில், இதுவரை விடுதி கட்டப்படாமல் கால தாமதம் ஆவதற்கு உரிய காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) திருக்கோயிலின் நிதி வசதி சரியின்மையால் அறங்காவலர் குழு இத் திட்டத்தைக் கைவிடத் தீர்மானித்துள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, கிருஷ்ணராயபுரத்தில் ஊராட்சி ஒன்றியமும், வங்கி நிறுவனங்களும் இன்னும் ஏராளமான அலுவலகங்களும் இருக்கின்றன. அந்த இடத்தில் அதிகாரிகள் வந்தாலோ அல்லது வேறு யாராவது வந்தாலோ தங்குவதற்கு இடவசதி இல்லை. நான் அறநிலையத் துறை ஆணையரை கேட்டபோது நிச்சயம் செய்துதரப்படும் என்று சொன்னார். இப்போது இல்லை என்று சொல்வதற்கு பணம் இல்லையா அல்லது மனம் இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மனம் இருக்கிறது பணம் இல்லை.